# ஓர் கிட்டிய பார்வை





# பாருங்கள்

***கண்ணாடியில் பாருங்கள்***

கண்ணாடியில் நீங்கள் காண்பதை விரும்புகிறீர்களா? நீங்கள் விரும்பலாம், விரும்பாமலும் இருக்கலாம். சற்று கவனித்துப் பாருங்கள்! முகத்தின் குறைகளை அது எடுத்துக்காட்டுகிறது. நீங்கள் விரும்பாத ஓரிரு பருக்களும். நீங்கள் விரும்பாத அடையாளங்களும் தெரிகிறதா? அது புதுமையானது எவ்வளவுக்கு நெருங்குகிறோமோ, அவ்வளவுக்கு தெளிவாக காட்டும். இல்லாததொன்றையும் காண்பிக்காது. அருகிலோ தெலைவிலோ அது புறத்தோற்றத்தை உள்ளவாறே காண்பித்துவிடும். ஆனாலும் இந்தக் கண்ணாடியினால் உள்ளரங்கமானவற்றைக் காட்டமுடியாது.

**தேவனுடைய கண்ணாடியில் உங்களைப் பாருங்கள்!**
**அதில் தேவன் எதைக் காண்கிறார் என்பது புரிகிறதா?**

- உங்களின் எல்லா சிந்தனைகளையும்!

  *....என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர். (சங்கீதம் 139:2)*
- உங்களின் எல்லா வார்த்தைகளையும்!

  *என் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, இதோ, கர்த்தாவே அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். (சங்கீதம் 139:2)*
- உங்களுடைய எல்லா பயணங்களையும்!

  *கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப்பார்க்கிறது. (நீதி 15:3)*
- உங்களின் எல்லா செய்கைகளையும், அவை இரகசியமாயிருந்தாலும்

  *உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது; இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி. (சங்கீதம் 139:12)*

ஆண்டவரின் கண்ணாடியானது முற்றிலும் வித்தியாசமானதாகும். அவருடைய வார்த்தையான வேதம் எங்களுடைய எல்லா நிலைகளையும் ஆராய்கிறது. அது எங்களுடைய வெளித்தோற்றத்தையும் கடந்து இருதயத்தை ஆராய்கிறது.

நாங்கள் நீதியாக நடக்கிறோம், நாங்கள் நல்லவர்கள், மற்றவர்களும் எங்களை நல்லவர்களென்றே நினைக்கிறார்கள். நாங்கள் கொலை செய்வதில்லை, திருடுவதில்லை. சட்டத்தை மதிக்கும் பிரஜைகளாயிருக்கிறோம். நீங்களும் நானும் எப்படி பாவியாயிருக்க முடியும்? எங்கள் இருதயமோ வஞ்சனை மிக்கது. நாங்கள் ஏமாறலாம் ஆனால் தேவன் ஏமாறுபவரல்ல. அவர் அனைத்தையும் காண்கிறவரும் அறிகிறவருமாயிருக்கிறார்.

இறைவனுக்கு கீழ்படியாமையே பாவமாகும். நாங்கள் வெளிப்பார்வைக்கு நல்லவர்களாகத் தோன்றினாலும் உள்ளரங்கமாக நல்லவர்களல்ல. அவர் எண்ணங்களையும் நினைவுகளையும் அறிகிறவதராகையினால் வெளிப்படையான தோற்றத்தையும் தாண்டி உள்ளான இருதயத்தை காண்கிறார். ஆகையால் ஆண்டவர் சொல்கிறார் *"ஒரு பாவமும் செய்யாமல், நன்மையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை". (பிரசங்கி 7:20). நீதிமான் ஒருவனாகிலும் இல்லை. எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாக இருக்கிறோம்.* பரிசுத்தமுள்ள ஆண்டவரிடம் பாவமில்லை, அவர் பாவத்தை

வெறுக்கிறார். பாவமானது ஆண்டவரிடமிருந்து நம்மை பிரிக்கிறது. நீதியுள்ள ஆண்டவர் பாவத்தைத் தண்டியாமல் விடார். பாவத்தின் விளைவாகவே மரணம் பிரவேசித்தது. மரணம் சரீரத்தோடு முடிந்துவிடுவதில்லை, அது நித்திய மரணமாக எரிநரகம்வரை நிலைத்திருகிறது.

**நீங்களும் நானும் மரண அபாயத்திற்குள் இருக்கிறோம்!**

**ஒரு பெரிதான விடுதலை தேவைப்படுகின்றது!**

# பாருங்கள்

***<u>இயேசுவை நோக்கிப் பாருங்கள்</u>***

இயேசு கிறிஸ்துவின் சீஷரில் ஒருவரான பவுல் ரோமாபுரியிலியிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதிய கடிதத்தில் "*நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்*" என்று எழுதியிருக்கிறார்.

**இதன் அர்த்தம் என்ன?**

எங்கள் பாவங்களுக்காக நாங்கள் தண்டிக்கபட்டிருக்க வேண்டும். கிறிஸ்துவோ தம்முடைய ஜனங்கள் மீது கொண்ட அன்பினாலே, அவர்களுடைய எல்லா பாவங்களுக்கான தண்டனையை அவமானத்தோடும் வேதனையோடும் சிலுவையில் சுமந்தார்.

**அப்படியென்றால் நீங்கள் செய்யவேண்டியது என்ன?**

நாம் எமது பாவங்களை அறிக்கையிட்டு பாவத்திலிருந்து மனம்திரும்ப வேண்டும். நாம் எமது பாவத்திலிருந்து மாத்திரம் திரும்புகிறவர்களாயிராமல், கிறிஸ்துவை நோக்கி முழுமையாக திரும்புகிறவர்களாக மாறவேண்டும். அவரால் மாத்திரமே உங்கள் பாவங்களை மன்னித்து நித்திய வாழ்வான பரலோக வாழ்வை தரமுடியும். அவரை நோக்கி ஆவலோடு கூப்பிட்டு உங்களை காக்கும்படியாகவும், மன்னிக்கும் படியாகவும் மன்றாடவும். நீங்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது ஆண்டவரோடு ஒப்புரவாக்கப்பட்டு அவருடைய பிள்ளையாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகிறீர்கள்.

**இம்மானுவேலின் இரத்தத்தால், நிறைந்த ஊற்றுண்டே,**
**எப்பாவத் தீங்கும் அதனால், நிவிர்த்தியாகுமே.**

**மா பாவியான கள்ளனும், அவ்வூற்றில் மூழ்கினால்**
**மன்னிப்பும் மோட்சானந்தமும், அடைந்து பூரிப்பான்**

**காயத்தில் ஓடும் இரத்தத்தை, விசுவாசத்தால் காண்பேன்**
**ஒப்பற்ற மீட்பர் நேசத்தை, எங்கும் பிரஸ்தாபிப்பேன்**

**விண் வீட்டில் வல்ல நாதரை, நான் கண்டு பூரிப்பேன்**
**எந்தனை மீட்ட நேசத்தை கொண்டாடிப் போற்றுவேன்**

**இயேசு கிறிஸ்துவை**
**பற்றி மேலும்**
**அறிய விரும்புகிறீர்களா?**

*தயவு செய்து தொடர்பு கொள்ளவும்*
**போதகர் : வேயி யென் யீ - 6383-4676 (ஆங்கிலம்)**
**சகோதரன் : நந்தா – 9004-2716 (தமிழ்)**

**ஞாயிறு ஆராதனைக்கு அன்போடு வரவேற்கிறோம்!**
**ஞாயிறு காலை 9.30 மணிக்கு**
**சாலோம் பாப்திஸ்து சபை**
*8 New Industrial Road, LHK3 Building,#03-01,Singapore 536200*

